1973 நவம்பர் 29]

நீரேற்றுக் கருவிகள் நிறுவுவதற்கான கால அளவு

*505 வினா—திரு. க. நாகராஜன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின் இணைப்பு வழங்கியதன் பிறகு குறிப்பிட்ட காலத்திற்குள் நீரேற்றுக் கருவியை குடியானவர்கள் நிறுவ வேண்டும் என்று விதி வகுக்கும் செயற்குறிப்பு ஏதுவுமுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, விவசாயிகள் நீரேற்றுக் கருவியைப் பொருத்திய உடன், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மின்னிணைப்பு வழங்கப்பட வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இது இயலாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டும் பல இடங்களில் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, வரிசை முறைப்படி பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அப்படிச் செய்யலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. இப்போது விவரம் சேகரித்து, பரிசீலனை செய்து, தொழில் துறையோடு கலந்து, ஜாபிதா—வரிசைப் பட்டியல் தயாரிக்கச் சொல்லியிருக்கிறோம். குறிப்பு வந்தவுடன் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்த நீரேற்றுக் கருவிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு கிராம கர்ணங்களிடமிருந்து அத்தாட்சி பெற்று வரவேண்டுமென்று மின்சார வாரியம் விதிமுறை வைத்திருக்கிறது. சாதாரண விவசாயிகளுக்கு அதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த முறையை ரத்து செய்வார்களா? சான்றிதழ்

[1973 நவம்பர் 29

வேண்டுமென்றால் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்ற முறையை கையாள ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து சுலபமாக சான்றிதழ் பெற்றுவிடலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருந்தாலும், மின்சாரம் கிடைக்கின்ற அளவுக்குத்தான் இணைப்புகள் கொடுக்க முடியும். அதுதான் இப்போதைய பிரச்சனை. ஏற்கெனவே இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பவர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். இனிமேல் உற்பத்தியைப் பொறுத்து புதிய இணைப்புகள் கொடுக்க வேண்டும். இணைப்பு வேண்டுமென்று லட்சக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. உற்பத்தியைப் பொறுத்து, எவ்வளவு கொடுக்க முடியுமோ அது நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், மின்சார இலாகாவிலிருந்து அனுமதி பெற்று, விவசாயிகள் பம்புசெட்டுகளை அமைக்கிறார்கள். பம்புசெட்டு அமைக்கப்பட்டவுடன் மின் இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. ஆனால் பம்புசெட்டு அமைக்கப்பட்டவுடன், அவர்கள் கடனைப் பெற்ற பணத்திற்கு இன்ஸ்டால்மென்ட் கட்ட வேண்டியிருக்கிறது. உடனடியாக மின் இணைப்புக் கொடுத்தால்தான், அவர்கள் உற்பத்தி செய்து, அரசாங்கக் கடனை ஒழுங்காகக் கட்ட முடியும். ஆகவே, பம்புசெட்டு அமைக்கப்பட்ட உடனேயே மின்னிணைப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்போது 6½ லட்சம் பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். மொத்தம் கேட்டது 11 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 1½ லட்சம் பேர்கள் கேட்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் கொடுக்க முடியாது. இருப்பதை வைத்துத்தான் கொடுக்க முடியும். முதலில் கடன் வாங்கியவர்களுக்குக் கொடுப்பதா அல்லது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெரிவித்ததுபோல் வரிசைப்படிக் கொடுப்பதா என்பதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. ரா. முனுசாமி: மின்சார மோட்டார்களுக்கு இணைப்பு கொடுப்பதில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதுவும் நிலவள வங்கி மூலமாகப் பணம் கடன் கொடுக்கப்பட்டவர்களுக்கே மின் இணைப்புக் கொடுப்பதாகத் தெரிகிறது. செஞ்சி வட்டத்தைப்

1973 நவம்பர் 29]

பொறுத்தவரை யாருக்கும் நிலவள வங்கி மூலமாகக் கடன் கொடுக்கப்படவில்லை. அவரவர்கள் சொந்தமாக, தனிப்பட்ட முறையில் கடன் வாங்கி மின்சார மோட்டார் இணைத்திருக்கிறார்கள். கடந்த ஏழெட்டு மாதங்களாகவே அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைக்கவில்லை. இவர்களுக்குப் பார்ஸ்ட் ப்ரையாரிடி வைத்து மின் இணைப்பு கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சாதாரணமாக கையில் இரண்டாயிரம் ரூபாய் உள்ளவர் கடன் வாங்காமலேயே மின் மோட்டார் வைத்துக்கொள்ள முடியும். நிலவள வங்கி மூலம் கடன் பெற்றவர்களுக்குத்தான் என்று இல்லாமல் எந்த எந்தத் தேதியில் பதிவு செய்துகொண்டார்களோ, அந்தந்த தேதி அடிப்படையில் வரிசையாக மின் இணைப்பு கொடுப்பது நலமாக இருக்குமா என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ஆறுமுகம் : எங்கள் மதுராந்தகம் பகுதியில் சென்ற ஓராண்டு காலமாக மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. முன்பெல்லாம் அக்ரிமெண்டானால் ஒரு வாரத்திற்குள் கொடுத்து விடுவார்கள். இப்போது அதிகாரிகளிடத்தில் கேட்டால் கம்பிகள் இல்லை என்று சொல்லி அக்ரிமெண்டு ஆனவர்களுக்குக் கூட கனெக்ஷன் கொடுக்காமல் இருக்கிறார்கள். உடனடியாக அங்கே மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மின்இணைப்பு கொடுப்பது என்றால் மின்சார இருப்பு இருக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுப்பதன் மூலம் ஏற்கனவே 12 கோடி ரூபாய் நட்டம் வருகிறது. இது அதிகரித்தால் இன்னும் எந்த அளவு தாங்க முடியும் என்று பார்த்தும் செய்ய வேண்டியிருக்கிறது.

Guides in Meenakshi Amman Temple

* 506 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to post only trained guides at Madurai Thiru Meenakshi Temple; and

(*b*) the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.